# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,922—1970 සැප්තැම්බර් 4 වැනි සිකුරාදා—1970.9.4

14,922 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 4 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 793 | ஏலவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 804 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 809 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 812 | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | 813 |


## பதவிகள் — வெற்றிடம்

### " இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

*1. படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் விதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத விதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத விதத்தையோ அத்தோடு மேலும் 5 சத விதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½சத விதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவிபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறு

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

*அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1969 ம் ஆு திசெம்பர் மீ 14 ந் உ*

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
*அரசாங்க அழுத்தகர்.*

---

வதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாகவிருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளிற் முன்பு சேவையாற்றியவர்களும், நியமனக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பன வற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவைக் ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கி விடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கி விடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

No. AB. 90/X.2270/69.

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### இரசாயன வல்லுனர் பதவி

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் இரசாயன வல்லுனர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இத்திணைக்களத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, த. பெ. என் 500, கொழும்பு 1, என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அதற்குமுன் கிடைக்கக்கூடியதாய் அனுப்பி வைத்தல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : 1970.9.18.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 1970.9.25.

குறிப்பு :—1969 ஆம் ஆண்டு டிசெம்பர் 12 ஆம் திகதியின் அரசாங்க வர்த்தமானியில் விண்ணப்பங்களுக்கென பிரசுரிக்கப்பட்டிருந்த பிரகாரம் இப்பதவிக்கு விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை. இவ்விளம்பரத்தின் பிரகாரம் கிடைக்கும் விண்ணப்பங்களுடன் அவர்களுடைய விண்ணப்பங்களும் கவனிக்கப்படும்.

குறிப்பு :—(i) அச்சிட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்வோர் 9"×4" அளவிற்குக் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஓர் கடிதவுறையில் தமது சொந்த முகவரியை எழுதி கடிதத்துடன் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பத்தாரர் அரசாங்க சேவையில் உள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக்கூறப்படும் குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்கு கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்புடையவராவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள விண்ணப்பதாரர் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம். அவ்விண்ணப்பத்தாரர் விரும்பினால் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்குச் சமீபமாயுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பி வைக்கலாம்.

(iv) மருத்துவப் பரிசோதனையும் பயணச் செலவும்.—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவுசெய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள் சேவைக்குத் தகுதியான உடல்நலமுடையவர்களா என்பதை உறுதிப்படுத்தும் கருத்துடன் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பரிசோதனைக்குச் செல்லுமாறு வேண்டப்படுவர். அத்தகைய மருத்துவச் சோதனைக்குரிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்குரிய செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. நியமன நியதிகளும் சேவையின் நிபந்தனைகளும்.—பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளமுடையதாகும். விதவையர், அநாதையர் உபகாரச் சம்பளத் திட்டத்திற்கு உதவுபணம் செலுத்துதல் வேண்டும்.

3. வேதனம்.—இப்பதவிக்குரிய திரட்டிய வேதனம் பின்வருமாறு :—ரூ. 11,520 க்கு முன்னும் ரூ. 14,880 க்கு முன்னும் வினைத்திறமைக்கான் தடையுடன் ஆண்டொன்றுக்கு ரூ. 6,720—12×360 உம் 11×480—ரூ. 16,320. (இது 1.10.69 க்கு முன்விருந்த, ரூ. 4,030—12×360 உம் 10×480—ரூ. 13,200 வரையுமுள்ள அடிப்படைச் சம்பளத் திட்டத்தையுடையது.)

குறிப்பு—மேற்கூறப்பட்ட சம்பளத் திட்டத்தில் ரூ. 11,040 ஐக் கடப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பத்தாரர் அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையின் உயர்பட்டதாரிப் பட்டம் அல்லது நிலத்தக நீர் இரசாயனத்தில் தராதரப் பட்டம் பெறல் வேண்டும். இத்தகைமையைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர் சேவையில் சேரும் பொழுது ஆண்டொன்றுக்கு ரூ. 7,800/- என்ற தொடக்கச் சம்பளத்தில் நியமிக்கப்படுவர்.

4. வேண்டிய தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பத்தாரரும் சமர்ப்பிக்க வேண்டிய திருப்திகரமான சான்று, அவர்—

(அ) சிறந்த நற்குணமுடையவராகவும் உடல் நலமுடையவராயுமிருத்தல் வேண்டும்.

(ஆ) 18.9.1970 ம் திகதியில் 22 வயதிற்குட்படாதவராயிருத்தல் வேண்டும். ஆரம்பப் பட்டம் பெற்றவர்களுக்கு மேல் வயது எல்லை 19,0 ல் அங்கீகரிக்கப்பட்ட கலாசாலையில் தகுதித் தேர்வுப் பத்திரம் அல்லது உயர் பட்டதாரிப் பட்டம் பெற்றவர்களுக்கு மேல் வயது எல்லை 35 மாகும். (அரசாங்க சேவையிலோ அல்லது கூட்டுத்தாபனங்களிலோ நிரந்தரமான உத்தியோகமுடையவர்களுக்கு இம்மேல் வயது எல்லை கணிக்கப்படமாட்டாது.)

(இ) இரசாயனத்தில் முதலாம் அல்லது இரண்டாம் விசேட தரப் பட்டம் அல்லது இதற்குச் சமமான கல்வித் திறனுடையவராயிருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பத்தாரர் பின்வரும் சாதனங்களில் எதையேனும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கப்படும்பொழுது அவைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (சமய நீடசைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.)

(ஆ) பல்கலைக்கழகப் பட்டம் அல்லது உயர்தரக் கல்விச் சான்றிதழ்.

(இ) பண்புச் சான்றிதழ் இரண்டு. இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி அதிபர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற் தகைமை அல்லது தொழிநுட்பத் தகைமை பற்றிய அல்லது உயர் தொழிற் தகைமையும் தொழிநுட்பத் தகைமையும் பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு—(1) சாதனங்களையாயினும் அல்லது சாதனங்களின் பிரதிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பத்தாரர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களை தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் தாம் விண்ணப்பம் அனுப்பும் திகதியை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு நேராக அவர்கள் அறிவிக்க வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறிப்பிட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் முதலாம் பாகம் இரண்டாம் பிரிவில் வெளியிடப்பட்டிருப்பதைப் பார்க்கவும்.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறிப்பிட்டுள்ளது) அதன் பிரகாரம் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பக்காரர் நிரப்பித் திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத விண்ணப்பக்காரர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படயாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறாவிடின் உடனே அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பக்காரர் தங்கள் விண்ணப்பங்களைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமையெதுவும் உடையராகார்.

எஸ். பி. நாநாயக்கார,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அலுவலகம்,
த. பெ. எண் 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1, 1970.8.28.

9-230/1—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,922

---

No.: AB.88/X.2271/69.

## பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களம்

### புவிப்பௌதிகவியலாளர் அல்லது பயிற்சி பெறும் புவிப்பௌதிகவியலாளர் பதவி

பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களத்திலுள்ள புவிப் பௌதிகவியலாளர் அல்லது பயிற்சி பெறும் புவிப் பௌதிகவியலாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இக்கந்தோரால் வழங்கப்படும் அச்சிடப்பட்ட படிவங்களில் எழுதப்பெற்று, "செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, த. பெ. இல. 500, கொழும்பு 1" என்ற முகவரிக்கு பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : 1970.9.18.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 1970.9.25.

குறிப்பு :—(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9"×4" அளவுக்குக் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்துடன் அனுப்புதல் வேண்டும். மேலும் அபேட்சகராக இருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதை விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரை பொறுத்திருப்பவர்கள் அதனால் ஆகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிற நாட்டிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதியின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள

லாம். அவ் அபேட்சகர்கள் விரும்பினுல் விண்ணப்பப் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டிற்குரிய அல்லது அந்த நாட்டிற்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(iv) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும் :—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள் சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாக இருக்கிறுர்களா என்பதை உறுதிப்படுத்துவதற்கான மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அந்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

### புவிப் பௌதிகவியலாளர்

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—இப்பதவி நிரந்தரமாவதும் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குட்பட்டதுமாகும். இந் நியமனம் முதல், 3 வருட கால தகுதி காண் நிலையில் உள்ளதாயிருக்கும்.

3 சம்பளங்களும் படிகளும்.—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு : வருடம் ரூபா 6,720 ல் ஆரம்பமாகி ரூபா 360 ஐக் கொண்ட 12 வருட உயர்வுகளாலும், வருடம் ரூபா 480 ஐக் கொண்ட 11 வருட உயர்வுகளாலும் ரூபா 16,320 வரை உயர்வதுடன் வருடாந்தச் சம்பளம் ரூபா 11,520 க்கு முன்னும் ரூபா 14,880 க்கு முன்னும் வினைத் திறமைகாண் தடைகள் உண்டு. தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் வருடச் சம்பளம் 11,040 க்கு மேலாகுமுன் அங்கீகரிக்கப்பட்ட புவிப்பௌதிகவியல் துறையில் பட்ட மேற்படிப்புப் பட்டமோ, அல்லது அதற்குச் சமமான பட்டமோ பெற வேண்டும். அல்லது அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞான வெளியீடு ஒன்றில் தனது சொந்த வேலை சம்பந்தமான விஞ்ஞான ஈடுபாடுபற்றிப் பிரசுரிக்கப்பட வேண்டும். அப்படிப் பிரசுரிக்கப்பட்ட வேலையை வருடம் ரூபா 11 520 ல் உள்ள வினைத்திறமைகாண் தடையின் உயர்வுக்காக அரசாங்க சேவை அதிகாரசபையால் நியமிக்கப்படும் குழுவால் மதிப்பிடப்படும். அபேட்சகர் பட்ட மேற்படிப்புப் பட்டதாரியாகவோ அல்லது அதற்குச் சமமாகவோ இருந்தால் அல்லது தேர்வு செய்யப்படும் நேரத்தில் ஓர் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞான வெளியீட்டில் தனது வேலையைப் பிரசுரித்திருந்தால், அரசாங்க சேவை அதிகாரசபையால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவால் பிரசுரிக்கப்பட்ட வேலையை மதிப்பீடு செய்த பின்னர் வருடம் ரூபா 7,800 ஐ ஆரம்பப்படியாக வழங்கப்படும்.

4. தேவையான தகைமைகள்.—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) வம்சாவழியாகவோ அல்லது பதிவினுலோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(இ) 1970.9.18 ல் 22 வயதுக்கு உட்படாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களிடமிருந்து பெறும் விண்ணப்பங்கள் கூடிய வயதுக் கட்டுப்பாடு வேற்றுமையின்றிக் கவனிக்கப்படும்).

(ஈ) ஓர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானப் பட்டதாரிப் (விசேஷ) பட்டத்துடன் புவிப் பௌதிகவியலில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பில் சிறப்புப் பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

### பயிற்சி பெறும் புவிப் பௌதிகவியலாளர்

5. தகைமைகளும், நியமன நியதிகளும், படிகளும், சேவை நிபந்தனைகளும் :—

(i) 4 ம் பந்தியில் குறிப்பிட்ட தகைமைகள் உள்ள அபேட்சகர்கள் புவிப் பௌதிகவியலாளர்களாக நியமிக்கத் தோற்றுவிடின் கீழ்க் காணும் தகைமைகளையுடைய அபேட்சகர்களை பயிற்சி பெறும் புவிப் பௌதிகவியலாளர்களாகத் தெரிவு செய்ய ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். அப்படித் தெரிவு செய்யப்பட்டோர் புவிப்பௌதிகவியலாளர் பதவிக்கு நியமிக்கப்படமுன் புவிப்பௌதிகவியலில் விஞ்ஞானப் பட்டதாரிப் (விசேஷ)பட்டத்துடன் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புச் சிறப்புப் பட்டம் பெறவேண்டும்.

(அ) ஓர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பௌதிகவியல் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புச் சிறப்புப் பட்டத்துடன் விஞ்ஞானப் பட்டதாரி (விசேஷ) பட்டம்.

(ஆ) பயிற்சி பெறும் புவிப் பௌதிகவியலாளராக நியமிப்பதற்கு பூகற்ப ஆராய்ச்சிக் கந்தோரில் குறைந்தது 2 வருடங்கள் கடமையாற்றிய பின்வரும் கல்வித் தராதரங்களையுடைய உத்தியோகத்தரும் ஆலோசனைக்குத் தகுதியுடையவராவர்.
(1) கணிதத்துடனும் பௌதிகத்துடனும் விஞ்ஞானப்பட்டதாரிப் (பொது) பட்டம்.

(இ) 1970.9.18 ல் வயது 19 க்கு உட்படாமலும் 26 க்கு மேற்படாமலும் இருந்தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களிடமிருந்து பெறும் விண்ணப்பங்கள் கூடிய வயதுக்கட்டுப்பாடு வேற்றுமையின்றிக் கவனிக்கப்படும்.

(ii) விஞ்ஞானப் பட்டதாரிப் (பொது) பட்டத்துடன் நேரடியாகத் தெரிவுசெய்யப்பட்டோருக்கு பயிற்சியில் இருக்கும் காலத்தில் வருடம் ஒன்றுக்கு நிலையான திரட்டிய சம்பளம் ரூ. 6,456 ம் விவாகமாகியிருந்தால் விவாகப்படியும் வழங்கப்படும். பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களத்திலிருந்து பயிற்சி பெறும் புவிப் பௌதிகவியலாளராகத தெரிவு செய்யப்பட்டோர் பயிற்சிக்காலங்களில் தங்களது முந்திய பதவியின் சம்பள அளவுத்திட்டத்திலேயே தொடர்ந்தும் சம்பளம்பெறுவர். பயிற்சியை வெற்றிகரமாக முடித்ததும் அதாவது புவிப்பௌதிகவியல் விஞ்ஞான பட்டதாரி (விசேஷ) பட்டம் பெற்று புவிப் பௌதிகவியலாளராக நியமிக்கப்பட்டதும், அவர்கள் 3 ம் பந்தியில் குறிப்பிட்ட சம்பள அளவுத்திட்டதிற்கு உரிமையுடையோராவர்.

(iii) பயிற்சி பெறும் புவிப்பௌதிகவியலாளர் பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களத்தில் பயிற்சி நெறி ஒன்றில் ஈடுபடுத்தப்படுவர். அவருடைய வேலையும் நடத்தையும் திருப்திகரமாகக் காணப்பட்டால் புவிப்பௌதிகவியலில் பயிற்சி பெறுவதற்காக ஒரு பல்கலைக்கழகத்திற்கு அனுபபப்படுவார். திணைக்களத்தில் பயிற்சி பெறும் காலத்தில் ஒரு பயிற்சியாளரது வேலையும் நடத்தையும் திருப்திகரமற்றதெனக் காணப்படின் அல்லது அவருக்கென ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சி நெறியில் பயில மறுததால் அவர் முன்னறிவித்தல் எதுவும் இன்றி நீக்கப்படுவர். அத்துடன் திணைக்களத்தில் அவரது பயிற்சிக்கென செலவிடப்பட்ட குழுத்தொகையையும் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுவார்.

(iv) தெரிவு செய்யப்பட்டவர் நியமனத்திற்கு முன்போ அல்லது பின்போ பயிற்சி நெறியைப் பெறுவதற்காக வெளிநாட்டுக்கு அனுப்ப நேரிடலாம். பயிற்சி நெறிக் காலத்தில் அந்நேர ஏற்பாட்டிற்கிணங்க படிகள் வழங்கப்படும். தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் பிற நாட்டில் பயிற்சி நெறி ஒன்றைப் பின்பற்ற நேரிட்டால் அவர் அரசாங்கத்துடன் ஓர் உடன்படிக்கை செய்யக் கேட்கப்படுவார். (ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாதோர் இரண்டு பிணை நிற்போருடன் உடன்படிக்கை செய்யக் கேட்கப்படுவார்) அத்துடன் பின்வருவனவற்றையும் மேற் கொள்ளப்படுவாராவர் :—

(அ) அவர் ஊக்கமாகவும் விசுவாசமாகவும் தனக்கு ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சி நெறியை பின்பற்றி அதனைத் திருப்திகரமாக முடித்ததும் பயிற்சி முடிவில் அவசியமேற்பட்டால் ஒரு குறிப்பிட்ட காலம் வரை (அரசாங்கத்தால் தீர்மானிக்கப்படும்) அரசாங்கத்துக்குச் சேவை செய்வதாயும் ;

(ஆ) இந்த உடன்படிக்கை அல்லது பிணை ஆகியவற்றின் நிபந்தனைகளுக்கு ஏற்ப நடக்கத் தவறினுல் இலங்கை அரசாங்கத்தால் அல்லது புலமைப் பரிசில் அளிக்க முன்வந்த ஸ்தாபனத்தால் பொறுக்கப்பட்ட முழுச் செலவுகளையும் அதாவது சம்பளம், படிகள், பயணச் செலவுகள், பயிற்சியோடு சம்பந்தப்பட்ட வேறு செலவுகளையும் அரசாங்கத்திற்கு மீளளிப்பதாயும் உடன்படிக்கை செய்ய வேண்டியவராவர்.

6. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும் பொழுது சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (முக்கியம் : சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது)

(ஆ) பல்கலைக் கழகப் பட்டம் அல்லது மிக உயர்ந்த சான்றிதழ்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு. இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) தொழிற்றகைமையும், தொழினுட்பத் தகைமையும்/தொழிற் தகைமை அல்லது தொழினுட்பத் தகைமைபற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு :—1. சாதனங்களையாயினும், சாதனங்களின் படிவங்களையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக் கூடாது.

2. சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

7. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவர்களூடாக அனுப்புதல் வேண்டும். எனினும், அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

8. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் "செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை" என முகவரியிட்டு அனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்கும் நேராக அனுப்பக் கூடாது.

9. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

10. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது) அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பக்காரர் நிரப்பி அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமையைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத் தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமைபற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தினைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

எஸ். பி. நாணயக்கார,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1, 1970.8.28.

9-230/2—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,922

---

## தொழிற்றிணைக்களம்

### படவரைவாளர் பதவி

தொழிற்றிணைக்களத்தில், படவரைவாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பஞ் செய்வோர், இவ்வறிவித்தலடியிற் குறித்துக்காட்டப்பட்டுள்ளவகையில் மாதிரிப் படிவத்தினை அமைத்தெழுதி, "தொழில் ஆணையாளர், தொழிற் செயலகம், கொழும்பு" என்ற முகவரியில் 1970 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ந் தேதியன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியனவாக விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.

2. நியமன நியதிகள்.—இப்பதவி நிரந்தரமும் இளைப்பாற்றுச் சம்பள உரிமையும் உடையது. தெரிவு செய்யப்படுவோர், விதவைகள் அனாதையர் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்குப் பணமுதவும்படி வேண்டப்படுவர்.

3. சம்பள அளவுத்திட்டம்.—இப்பதவிக்கான சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—

ஆண்டுக்கு ரூ. 1,260—120—3,780 (ரூ. 2,820 வருமுன் திறமைக் கடவை)

(ஆண்டுக்குத் திரட்டிய சம்பளம் ரூ. 3,432—144—6,456.)

குறிப்பு.—தெரிவு செய்யப்படுபவர், படவரையாளர் பற்றி ஆலோசனை கூறுவதற்கான திணைக்களங்கள் சேர்குழுவின் ஆலோசனையுடனும் திறைசேரியின் அங்கீகாரத்துடனும் சம்பள அளவைத் திட்டத்தின் தொடக்கச் சம்பளத்திலும் பார்க்கக் கூடுதலான படியில் வைக்கப்படலாம். அப்படி வைக்கும் சலுகைக்கு அவரது தகுதியும் அனுபவமும் இடமளிப்பனவாய் இருத்தல் வேண்டும்.

4. தகைமைகள்.—விண்ணப்பகாரர்—

(அ) 1970 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ந் தேதியன்று 25 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். (அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு மேல் வயதெல்லை இராது).

(ஆ) சிறந்த நல்லொழுக்கமும் உடலுறுதியும் உடையவராய் இருத்தல் வேண்டும்.

(இ) அரசாங்கத் திணைக்களம் ஒன்றிலோ அங்கீகரிக்கப்பட்டதொரு வர்த்தகத் தாபனத்திலோ, தொழினுட்பப் பொறியியற்றுறைப் படவரைவாளராக ஐந்து ஆண்டுகளாவது பணியாற்றிய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது,

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட படவரைவு அலுவலகத்திலோ தொழிற்சாலையிலோ மூன்று ஆண்டுத் தொழிற் பயிற்சி பெற்று, தொழில்நுட்பப் பொறியியற்றுறைப் படவரையாளராக இரண்டு ஆண்டுகளாவது பணியாற்றிய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு.—முற்கூறியவற்றுடன், பின்வருவனவற்றிலும் தகைமையுடையோர் விரும்பப்படுவர் :—

(i) பொறித்தொகுதி எந்திரக்கோவை ஆகியவற்றைச் சாதாரணமாய வரைவதில் அனுபவம்.

(ii) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கனிஷ்ட தொழில்நுட்ப அலுவலாளர் பயிற்சி நெறி.

(iii) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் தொழில் நுட்பப் பொறியியற் பயிற்சி நெறி—பாகம் ஒன்று.

(iv) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரிப் படவரைவாளர் பயிற்சி நெறி.

(v) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பத் தகைமைகள் பிற.

5. விண்ணப்பக்காரர் தமது விண்ணப்பங்களுடன், பின்வருவனவற்றின் படிகளை (மூலப்படிகளையன்று) அனுப்பிவைத்தல் வேண்டும் :—

(அ) பிறப்புச் சான்றிதழ்.

(ஆ) கல்வித் தகைமைச் சான்றிதழ்களும் தொழில் நுட்பத் தகைமைச்சான்றிதழ்களும்.

(இ) அண்மையிற் பெற்றுக்கொண்ட குணச்சான்றிதழ்கள் இரண்டு. (அரசாங்க சேவையிலுள்ளோர்க்கு இது தேவையில்லை).

6. இவ்வரசாங்க வர்த்தமானியின் I ம் பாகம் II ம் பிரிவின் தொடக்கத்திற் பிரசுரிக்கப்பட்டிருக்கும் அரசாங்க சேவையிலுள்ள பதவி நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளையும் நோக்குமாறு வேண்டுகிறோம்.

7. விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி எழுதி அறிவிக்கப்படமாட்டாது. 5 ம் பந்தியிற் கூறியதைக் கவனிக்காது அனுப்பப்படும் சான்றிதழ்களின் மூலப்படிகள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

டபிள்யு. எல். பீ. டி மெல்,
தொழில் ஆணையாளர்.

தொழிற்றிணைக்களம்,
தொழிற் செயலகம்,
1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26 ந் தேதி

குறித்த படிவம்

படவரைவாளர் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப் பெயர் :———.
(தெளிவான தனி எழுத்துக்களில்)
சொந்தப் பெயர் :———.
பிற பெயர்கள் :———.

2. முகவரி :———.

3. பிறந்த தேதி : (பிறப்புச் சான்றிதழின் படியொன்று இணைக்கப்படல் வேண்டும்) :———.

4. (அ) பிறந்த தேதி :———.
(ஆ) வயது (28.9.1970 ல்) :———.
ஆண்டு :———. மாதம் :———. நாள் :———.
(இ) எத்தேசத்தவர் ? பிரசா உரிமை எங்ஙனம் பெறப்பட்டது ? :———.

5. பிறந்த இடம்—
(அ) விண்ணப்பகாரர் :———.
(ஆ) விண்ணப்பகாரரின் தந்தை :———.
(இ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பாட்டன் :———.
(ஈ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பூட்டன் :———.
(விண்ணப்பகாரர் இலங்கையிற் பிறந்தவராயின், (அ) வுடன் (ஆ) வோ, அல்லது (இ), (ஈ) ஆகிய இரண்டுமோ நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பகாரர் இலங்கையிற் பிறந்திராவிடின் (அ) வுடன் (ஆ), (இ) ஆகிய இரண்டுமோ, அல்லது (இ), (ஈ) ஆகிய இரண்டுமோ நிரப்பப்படுதல் வேண்டும்).

6. விண்ணப்பகாரர் திருமணம் செய்தவரா ? செய்யாதவரா ? :———.

7. கல்வித் தகைமைகள் :———.

8. தொழில்நுட்பத் தகைமைகள் :———.

9. பாடசாலையை அல்லது கல்லூரியைவிட்டு விலகியபின், எங்கேனும் வேலைக்கமர்ந்திருந்தால் அதனைக் குறிப்பிடுக :———.

10. சிறப்பியல் உரிமைக் கோரிக்கைகள், தகைமைகள், பயிற்சி அல்லது அனுபவம் பற்றிய விபரங்கள் :———.

11. விண்ணப்பகாரரின் திறமை, நல்லொழுக்கம் ஆகியவைபற்றி விசாரித்தறிவதற்கு உயர்நிலையிலுள்ள இருவரின் பெயரும் முகவரியும் தருக :———.

12. சான்றிதழ் வழங்கியோர் பெயர்களும் பதவிப் பெயர்களும் :———.

இவ்விண்ணப்பத்தில் யான் கொடுத்துள்ள விவரங்கள் யாவும் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இவ்விவரங்களில் எவையேனும் பொய்யானவை அல்லது தவறானவையென்று காணப்படுங்கால், அப்பிழையானது யான் தெரிவு செய்யப்படுதற்கு முன்னதாகக் கண்டுபிடிக்கப்படின் தகுதியற்றவனாக்கப்படுதற்கும், தெரிவு செய்யப்படுதற்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் நட்டஈடெதுவுமின்றி வேலை நீக்கஞ் செய்யப்படுதற்கும் ஆளாவேனென்பதையும் யான் அறிவேன்.

———,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

தேதி :———.

9-142—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,922

---

## கல்வி அமைச்சு

### அரசினர் ஆசிரியர் கலாசாலைகளில் விவசாயத்தில் பயிற்சி ஆசிரியர் பதவிகள்

கல்வி அமைச்சின் அரசினர் ஆசிரியர் கலாசாலைகளில் விவசாயத்தில் பயிற்சி ஆசிரியர் (சிங்கள, தமிழ் மொழிமூல) பதவிகளுக்கு ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் விதிக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்பட்டு " நிரந்தரச் செயலாளர், கல்வி அமைச்சு (ஆசிரியர் கலாசாலைகள் கிளை), மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு 1970 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 18 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

குறிப்பு.—(i) அச்சிட்ட படிவங்களுக்கான வேண்டுகோள்கள் கவனிக்கப்படமாட்டா. அபேட்சகர்கள் தமது படிவங்களை கீழ்க்காணும் படிவ முறையில் தயாரித்துக்கொள்ள வேண்டும்.

(ii) விண்ணப்பம் யாதேனும் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதிக்கப்பட்டது எனும் குற்றச்சாட்டு சீர்தூக்கப்படாது. கடைசிநாள் வரை தமது விண்ணப்பங்களைத் தாமதிக்கும் விண்ணப்பதாரிகள் தாமே தமக்கு இடைஞ்சலைத் தேடுபவராவர்.

(iii) 5.9.69 ஆந் திகதிய 14,870 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் வெளியான விளம்பரத்துக்கிணங்க விண்ணப்பித்தவர்கள் திரும்பவும் விண்ணப்பிக்க வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—(அ) இப்பதவி நிரந்தரமானதும் பாடசாலை ஆசிரியர் உபகாரச் சம்பளப் பிரமாணங்களின் கீழ் உபகாரச் சம்பள உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படுமுன் உபகாரச் சம்பளப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் உபகாரச் சம்பள உரித்துடைய பதவிகளை ஆசிரியர்களாக வகித்த நியமதாரிகளைப் பொறுத்தவரையில் இப்பதவிகள் அவர்கள் வகிக்கும் வரை உபகாரச் சம்பள உரித்துடையனவாகப் பிரகடனஞ் செய்யப்படும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் அபேட்சகர்கள் இத்தீவிலுள்ள எவ்வாசிரியர் கலாசாலைக்கும் நியமிக்கப்படக்கூடும்.

3. **சம்பளமும் சகாயப்படிகளும்.**—இப்பதவிக்கான ஒன்று திரட்டிய சம்பளவிகிதம் பின்வருமாறு :—

ரூ. 5,592—7 × 144—8 × 180—2 × 240—8,520 வருடாந்தம்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்வதாகத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராயிருக்க வேண்டும்.

(ஆ) 18.9.70 அன்று 25 வயதுக்குக் குறையாதவராயும் 50 வயதுக்கு மேற்படாதவராயுமிருக்க வேண்டும். (ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(இ) அபேட்சகர்கள், பட்டம் பெற்றபின் 3 வருட கற்பித்தல் அனுபவம் பெற்ற விவசாயப் பட்டதாரிகளாக அல்லது பயிற்றப்பட்ட பின் குறைந்தபட்சம் 5 வருட கற்பித்தல் அனுபவம் பெற்ற, உயர்தரப் பயிற்சி (விவசாயம் அல்லது விசேட பயிற்சி) (விவசாயம்) பெற்ற ஆசிரியராக இருக்க வேண்டும். அபேட்சகர்கள் சிங்களத்தில்/தமிழில் சிறந்த தகைமைகள் பெற்றிருக்க வேண்டும்.

5. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2.
1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 21 ந் உ.

(மாதிரிப் படிவம்)

### அரசினர் ஆசிரியர் கலாசாலைகளில் விவசாயத்தில் பயிற்சி ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பம்

1. (i) முழுப்பெயர் : ———.
(ii) முதலெழுத்துக்களுடன் பெயர் : ———.

2. தபால் விலாசம் : (i) சொந்த : ———.
(ii) அலுவலக : ———.

3. 18.9.70 அன்றுள்ளபடி சரியான வயது :
வரு : ———. மா : ———. நா : ———.

4. சாதியமும் அது எவ்வாறு பெறப்பட்டதென்பதும் :

5. பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பதாரி : ———.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ———.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் : ———.

6. கல்வித் தகைமைகளும் அவை பெறப்பட்ட திகதிகளும் : ———.
(பெறப்பட்ட கல்வித் தகைமைகளின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)

7. தொழிற் தராதரப் பத்திரங்கள் : ———.
(பெறப்பட்ட தொழிற் தராதரப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)

8. படித்த பாடசாலைகள் அல்லது கல்லூரிகள் : ———.
(சேர்ந்த விலகிய திகதிகள் கொடுக்கப்பட வேண்டும்)

9. படிப்பித்தல் அனுபவம் :—

(கீழ்வரும் முறையில் விபரங்கள் கொடுக்கவும்)

| பாடசாலையின் அல்லது கல்லூரியின் பெயர் | சேர்ந்த திகதி | விலகிய திகதி | வகித்த பதவி | சேவைக்காலம் | | | விலகியதற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | வரு. | மா. | நா. | |
| | | | | | | | |

மொத்தம் :

10. சிங்களத்தில்/தமிழில் பெற்றுள்ள தகைமை :————.

11. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்துள்ளவர்களின் (இனத்தவர்களல்லாதவர்) பெயர்களும், பதவிகளும். (மூன்று நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகள் (மூலப்பிரதிகளல்ல) இணைக்கப்பட வேண்டும். ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கு இது தேவையில்லை) : ————.

12. வேறு யாதேனும் தகைமைகள் : ————.

இவ்விண்ணப்பத்தில் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் சரியானவையும் உண்மையானவையுமென நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன். இதில் கொடுத்துள்ள விபரங்கள் யாதேனும் பிழையானவை அல்லது சரியற்றவை எனக் காணப்படின், தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்துக்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடுமின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

.................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

அதிபரின் சிபார்சு.

திகதி : ————. .................................

அதிபரின் கையொப்பம்.

9–144—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,922

---

## கல்வி அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில், போதனாசிரியர் பதவிகளுக்குப் பயில் போதனாசிரியர்களைத் திரட்டுதல்

கல்வி அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் ஏற்பட்டுள்ள போதனாசிரியர் பதவிகளுக்குப் பயில்—போதனாசிரியர்களைத் திரட்டும் பொருட்டு, கீழே தரப்பட்ட தகைமைகளை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே உள்ள மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்பட வேண்டிய விண்ணப்பங்கள், நிரந்தரச் செயலாளர் (பொது நிர்வாகக் கிளை) கல்வி அமைச்சு, மல்லி வீதி, கொழும்பு 2 எனும் விலாசதாரருக்கு 25.9.1970 ஆந் திகதியன்று, அல்லது அதற்கு முன்னராகக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்.

2. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு ஐந்தாம் பந்தியில் குறிப்பிட்டுள்ள ஒரு, அல்லது பல தொழில்களை ஒவ்வொரு வருடப் பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சி (கட்டுப்பெத்தையில் நிரந்தரமாக ஓர் ஆசிரியர் கல்லூரி நிறுவும் வரை) மொறட்டுவையிலுள்ள கனிட்ட தொழில்நுட்ப நிறுவனத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள ஆசிரியர் பயிற்சிப் பிரிவில் நடைபெறும்.

3. தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களிலுள்ள போதனாசிரியர் பதவி நிரந்தரமானதும் இளைப்பாறுஞ் சம்பள உரித்துடையதுமாகும். இந் நிரந்தரப் போதனாசிரியர் பதவிகளுக்கான திருத்திய ஆண்டுச் சம்பளத் திட்டம் வருமாறு :—

ரூபா 6,024—4 × 144—8 × 180—ரூபா 8,040.

குறிப்பு.—30.9.69 வரையும் இதன் சம்பளத் திட்டம் வருடத்திற்கு :— ரூபா 3,420—4 × 120—8 × 180—ரூபா 5,340 ஆகும்.

4. பயிற்சி பெறும் பொருட்டுச் சேர்க்கப்படுவோர் பின்வரும் கல்வி, தொழில், பிற தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(1) 25.9.1970 ஆந் திகதியன்று 19 வயதுக்குக் குறையாமலும், 35 வயதிற்கு மிகைப்படாமலுமிருத்தல்.

(2) நற்குணமும், உடநலமும் உடையவராயிருத்தல்.

(3) பின்வருவன சித்தியெய்திருத்தல் :—

(அ) சிரேட்ட பாடசாலைத் தகுதிப் பத்திரம்.

அல்லது

(ஆ) சிங்கள மொழி/தமிழ் மொழி உடன் எண்கணிதம்/கணிதம் உட்பட ஆறு பாடங்களில் இரு தடவைகளுக்கு மேல் தோற்றாது சித்தியெய்திய கல்விப் பொது (சாதாரண) தகுதிப் பத்திரம்.

அல்லது

(இ) ஒரு சமமான அல்லது உயர்ந்த பரீட்சை.

இவைகளுடன்

(4) (அ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரிகளின் அல்லது இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்லூரியின் கனிட்ட தொழில்நுட்ப அலுவலர் தராதரப் பத்திரம் (மின்முறை பொறிமுறை).

அல்லது

(ஆ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரிகளின் அல்லது இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்லூரியின் மூன்றாண்டு பொறிமுறை எந்திரவியல் தகுதிப் பத்திரம்.

அல்லது

(இ) காடி உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் பொறிமுறை எந்திரவியல் டிப்புளோமா.

அல்லது

(ஈ) இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்லூரியின் கனிட்ட தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்) தகுதிப் பத்திரம்.

அல்லது

(உ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் மாலை அல்லது பகுதி நேரக் கட்டிட அமைப்புத் தகுதிப் பத்திரம்.

அல்லது

(ஊ) காடி உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் குடிசார் எந்திரவியல் டிப்புளோமா.

அல்லது

(எ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் மூன்றாண்டு மாலை, மின் எந்திரவியல் தகுதிப் பத்திரம்.

அல்லது

(ஏ) அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் அல்லது வெளிநாட்டுத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்திலிருந்து பெறப்பட்டதும், உப பந்தி (அ) தொடக்கம் (எ) வரை குறிப்பிடப்பட்டவற்றுக்குச் சமனானது அல்லது அவற்றிலும் உயர்ந்தது எனக் கருதக்கூடியதும், கீழே தரப்பட்ட “5” ஆம் பந்தியிலுள்ள பயிற்சியொன்றைப் பெற ஏற்றதுமான வேறு தொழில்நுட்பத் தகைமைகள்.

5. பயிற்சிக் காலப் படிகள்.—

ரூபா 400 இலும் குறைந்த ஒரு நியாயமான மாதப்படி (அரசாங்க சேவையிலுள்ள அலுவலர் தேர்ந்தெடுக்கப்படுமிடத்து, இவ்விடயம் திறைசேரியுடன் ஆலோசிக்கப்பட்டு முடிவெடுக்கப்படும்).

தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் தேவைக்கு ஏற்ப கீழே தரப்பட்ட பயிற்சிகளில் ஒன்றிற்கு அல்லது பலவற்றிற்கு விண்ணப்பதாரி தேர்ந்தெடுக்கப்படுவர் :—

(1) தச்சு வேலையும் இணைப்பு வேலையும், பெட்டக உருவாக்கம் முதலியனவற்றைச் சிறப்பாகக் கொண்ட மரவேலை.

(2) பொருத்தல், பொறியிடு, மாற்றல் வேலை, தகட்டு உலோக வேலை, முதலியனவற்றைச் சிறப்பாகக் கொண்ட உலோக வேலை.

(3) வீட்டு மின் கம்பியிணைப்பும் மின் நிறுவனங்களும், ஒளியிடும் தொகுதி, குளிரேற்றல், காற்றுக் கட்டுப்படுத்தல், இரேடியோ பழுதுபார்த்தல் முதலியனவற்றை அடக்கிய மின்தொழில்.

(4) தானியங்கிப் பொறியியல், இழுபொறியின் பொறியியல் முதலியன.

(5) புடைவை நெய்தல்.

(6) வனைதலும் மட்பாண்ட வேலையும்.

(7) கொத்துவேலை, செங்கல் பதித்தல்.

(8) பிற சிறப்புத் தொழில்கள்.

6. பயிற்சியின் பொருட்டு பயில் போதனாசிரியர்களாகத் திரட்டப்படுவோருக்கு அமையும் நிபந்தனைகள் :—

(அ) பயிற்சியின் பொருட்டுத் திரட்டப்பட்டவர், அரசாங்கத்தால் குறிப்பிடப்படும் பயிற்சியைத் திருப்திகரமாக முடித்து, அப் பயிற்சி முடிவுறும்போது குறிப்பிடப்படும் தேர்ச்சியை எய்துதல் வேண்டும்.

(ஆ) (1) குறிப்பிடப்படும் பயிற்சியைப் பயிற்சிக் காலத்தில் திருப்திகரமாக முடிப்பார் எனவும் அதன் பின் அரசாங்கத்தால் வரையறுக்கப்படும் கால வரையில் கல்வித் திணைக்களத்தில் கடமை ஆற்றுவார் எனவும் இலங்கை அரசாங்கத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.

(2) பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் ஒப்பந்தத்தில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை மீறுமிடத்து, தம் பயிற்சிச் செலவு முழுவதையும் மீள அளிப்பதாக, இரு பிணையாளிகளுடன் உயர் நீதிமன்ற வழக்கறிஞரின் முன்னிலையில் ஓர் உடன்படிக்கை செய்தல் வேண்டும்.

(இ) (1) பயிற்சியை வெற்றிகரமாக நிறைவேற்றி, குறிப்பிடப்பட்ட தரத்தில் தேர்ச்சியடைந்து, நிரந்தர போதனாசிரியர் பதவியில் அமர்த்த ஏற்றவரெனப் பொருத்தமான அதிகாரிகளால் தகுதிப் பத்திரம் அளிக்கப்படும் அடிப்படையில், வெற்றிடங்கள் ஏற்படும்போது அப்பயிலுனர்கள் பதவியில் அமர்த்தப்படுவார்கள்.

(2) நிரந்தர போதனாசிரியர் பதவிக்குப் பயிற்சி பெற்ற போதனாசிரியர்கள் அமர்த்தப்படுமிடத்து, நிரந்தர போதனாசிரியர் பதவிக்கு விதிக்கப்படும் சாதனை அனுபவமும், கற்பிக்கும் அனுபவமும் அல்லது சாதனை/கற்பிக்கும் அனுபவம் ஐந்து வருட காலத்திலிருந்து குறைக்கப்பட்டு ஐந்து வருட கால அனுபவம் பெறும் வரையுள்ள மீதிக் காலத்திற்கும் இப்பதவிக்கான தொடக்கச் சம்பளத்தில் அமர்த்தப்படுவார்.

குறிப்பு.—(1) நிரந்தர போதனாசிரியர் பதவிக்கு நியமனஞ் செய்யும் போது, பயிற்சி பெறப் புகுமுன்பு பெற்ற அனுபவமும் கணக்கிடப்படும்.

(2) நிரந்தர போதனாசிரியர் பதவிக்குப் பயிற்சி பெற்ற போதனாசிரியர்கள் நியமனஞ் செய்யப்படும்போது, அவர்கள் ஒவ்வொரு போதனாசிரியர் பதவிக்கும் ஆள்திரட்டுத் திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட பொருத்தமான தகைமைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

7. அரசாங்க சேவையிலுள்ள தகுதியான விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள், தொடர்பான திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படுதல் வேண்டும். குறிக்கப்பட்ட திகதியின் பின் கிடைக்கும் விண்ணப்பங்களைப் பற்றியவிடத்து அவை குறிக்கப்பட்ட திகதியின் முன் திணைக்களத் தலைவர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டு, தாமதித்தற்கான ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணத்தைத் திணைக்களத் தலைவர்கள் கொடுத்து ஏற்றுக்கொள்ளும்படி சிபாரிசு செய்தாலன்றி ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

8. விண்ணப்பதாரிகள் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலங்களை அல்ல) இணைத்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (சமய தீட்சைச் சான்றிதழ், அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) உயர் கல்வித் தகைமைச் சான்றிதழும் தொழிற்றகைமைச் சான்றிதழும்.

(இ) விண்ணப்பதாரியின் தகைமைகள், குணம், நியமனத் தகுதி குறித்து அண்மையில் வழங்கப்பட்ட மூன்று குணச்சான்றிதழ்கள்.

குறிப்பு.—அரசாங்க சேவையில் ஏலவே உள்ள விண்ணப்பதாரிகள் மேற்குறிப்பிடப்பட்ட உப பிரிவு (இ) இன் பிரகாரம் சான்றிதழ்களை இணைக்க வேண்டியதில்லை.

9. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இவ் அரசிதழின் I ஆம் பாகம் II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள. அவற்றைப் பார்க்க.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி அமைச்சு.

இல. பொ. நி. 3/263,
கல்வி அமைச்சு,
மலே வீதி,
கொழும்பு 2,
1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 26 ந் உ.

(மாதிரி விண்ணப்பப் படிவம்)

கல்வி அமைச்சு

(8½" × 13½" அளவு அரைத்தாளில் தயாரிக்க வேண்டும்)

## தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் போதனாசிரியர் பதவிகளுக்கான பயில் போதனாசிரியர்கள்

(தொடரெண் : பொ. நி. 3/263)

1.. முழுப்பெயர் (தெளிவாக) திரு/திருமதி/செல்வி : ————.

2. தபால் விலாசம் : ————.
(விலாசத்தில் ஏற்படும் யாதேனும் மாற்றம் உடனே அறிவிக்கப்பட வேண்டும்)

3. சாதியம் : ————.

(வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா இலங்கையர் என்க் குறிப்பிடுக. பதிவு காரணமாக நீர் இலங்கைப் பிரசையாயின் பிரசாவுரிமைப் பத்திரத்தின் தொடர்பிலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக)

4. (அ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று உள்ளபடி வயது :—. வரு : ————. மா : ————. நா : ————.

(ஆ) பிறந்த திகதி : —.. வரு : ————. மா : ———— நா—
(பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதியை இணைக்கவும்)

5. பின்வருவோர் பிறந்த இடம் :—

(அ) விண்ணப்பதாரி : ————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன்வழிப் பாட்டன் : ————.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன்வழிப் பூட்டன் : ————.

6. (அ) 15 வயது தொடக்கம் படித்த பாடசாலைகள், கலலூரிகள், நிலையங்கள் :—

| பொதுக் கல்வி | | | உயர்தொழில்/தொழில்நுட்பக் கல்வி (யாதேனும் படித்திருப்பின்) | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கலலூரி | தொடக்கம் | வரை | நிலையம் | தொடக்கம் | வரை |
| | | | | | |

(ஆ) கடைசியாகப் பாடசாலையிலிருந்து விலகிய திகதி : ————.

7. (அ) விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா ? : ————.

(ஆ) விவாகம் செய்தவராயின், பின்வரும் விபரங்களைக் கொடுக்க :–
(i) விவாகத் திகதி : ————.
(ii) பிள்ளைகளின் எண்ணிக்கை : ————.

8. கல்வித் தகைமைகளும் கடைசியாகச் சித்தி எய்திய பரீட்சையும் அதன் திகதியும் :—

(அ) சிங்களத்தில் : ————.
(ஆ) தமிழில் : ————.
(இ) ஆங்கிலத்தில் : ————.

(viii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப் படங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப் படத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமானால், அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிபிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்ந்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணமற்போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகனிடமோ பணியாளிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெற வேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்ட வேண்டும்.

கே. சீ. டப்ளியு. சுமணசூரிய,
பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி, கொழும்பு 2.

9-220—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,922

---

## ஆசுபத்திரி எழுதுவினைஞர் சேவையின் நிறைவேற்றும் எழுதுவினைஞர் வகுப்பின் II ஆம் தரத்துக்கு உயர்த்துதற்கான பரீட்சை—நவம்பர், 1969

22.11.1969 ஆந் திகதியன்று நடைபெற்ற மேற்படி பரீட்சைப் பெறுபேறுகளின்மீது சிறப்புத் திறமை வரிசைப்படி பின்வரும் அபேட்சகர்கள் ஆசுப்பத்திரி எழுதுவினைஞர் சேவையின் நிறைவேற்றும் எழுதுவினைஞர் வகுப்பின் II ஆம் தரத்துக்கு உயர்த்தப்படுதற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்களென இத்தால் அறிவிக்கப்படுகிறது :—

| பெயர் | சேவைத் தானம் |
|---|---|
| 1. ஆறுமுகம், வி. .. | சௌக்கிய சேவை அத்தியட்சகர் காரியாலயம், மட்டக்களப்பு |
| 2. அபேசிங்ஹ, ஆர். .. | அரசினர் ஆசுப்பத்திரி, கேகாலை |
| 3. யஸவர்த்தன, ஏ. டி. கே... | பெரியாசுப்பத்திரி, இரத்தினபுரி |
| 4. மெண்டிஸ், பி. ஆர். பி. .. | கயரோக தடுப்பு இயக்க அத்தியட்சகர் காரியாலயம், கொழும்பு 12 |
| 5. பந்துசேன, ஏ. ரீ. .. | அரசினர் ஆசுப்பத்திரி, வெலிகம |
| 6. மானவடு, எம். .. | அரசினர் ஆசுப்பத்திரி, காலி |
| 7. பெரேரா, எம். ஏ. எஸ். ஏ. | அரசினர் ஆசுப்பத்திரி, கேகாலை |
| 8. ஜயதிலக, எஸ். எம். டி. ஜே. | அரசினர் ஆசுப்பத்திரி, குளியாப்பிட்டிய |
| 9. [illegible], கே. டபிள்யூ. .. | நிதிக்கிளை, சௌக்கிய சேவை அதிபதி காரியாலயம், கொழும்பு 1 |
| 10. குணவர்த்தன, ஜே. எஸ்... | பெரியாசுபபதிரி, கொழும்பு |
| 11. சில்வா, டி. பி. .. | பெரியாசுப்பத்திரி, கொழும்பு |
| 12. வடுதந்திரி, ஆர். டீ எஸ்... | அரசினர் ஆசுப்பத்திரி, றிதிகம |
| 13. சாமிநாதர், ஜீ. .. | டீ சொய்சா ஆசுப்பத்திரி, பெண்கள், கொழும்பு |
| 14. கிறிந்திவத்த, எச். பி. .. | அரசினர் ஆசுப்பத்திரி, பகவந்தலாவ |
| 15. டிசநாயக்கா, டி. .. | பெரியாசுப்பத்திரி, பதுளை |
| 16. மண்டாவள, ஜே. .. | பெரியாசுப்பத்திரி, கண்டி |
| 17. பஸ்குவல், சி. .. | அரசினர் ஆசுப்பத்திரி, கேகாலை |
| 18. வீரசிங்ஹ, எச். எம். எஸ்... | பெரியாசுப்பத்திரி, இரத்தினபுரி |
| 19. பியசேன, பி. ஏ. .. | பெரியாசுப்பத்திரி, கண்டி |
| 20. விஜயசிங்ஹ, ஏ. பி. .. | கொழும்பு வடக்கு பெரியாசுப்பத்திரி, ராகம |
| 21. சில்வா, பி. எல். சி. பி. .. | கயரோக தடுப்பு இயக்க அத்தியட்சகர் காரியாலயம், கொழும்பு 12 |
| 22. அமரசேன, எம். ஜீ. பி. .. | சௌக்கிய சேவை அத்தியட்சகர் காரியாலயம், காலி |
| 23. சுகதபால, கே. பி. .. | பெரியாசுப்பத்திரி, இரத்தினபுரி |
| 24. வில்லியம், ஏ. .. | பெரியாசுப்பத்திரி, பதுளை |
| 25. ஜயசிங்ஹ, ஜே. எம. டி. இ. | அரசினர் ஆசுப்பத்திரி, ஹொறணை |
| 26. [illegible]வேல், வி. .. | அரசினர் ஆசுப்பத்திரி, அனுராதபுரம் |

| பெயர் | சேவைத் தானம் |
|---|---|
| 27. குலரத்ன, எம். ரி. | பெரியாசுப்பத்திரி, கொழும்பு |
| 28. செம்புக்குட்டிகே, ஏ. எல். | அரசினர் ஆசுப்பத்திரி, மாத்தற |
| 29. டேடுவ, கே. | அரசினர் ஆசுப்பத்திரி, ஹுனுகல |
| 30. எதிரிவீர, சி. | நிதிக்கிளை, சௌக்கிய சேவை அதிபதி காரியாலயம், கொழும்பு |
| 31. பிரேமரத்ன, ஜீ. | அரசினர் ஆசுப்பத்திரி, ஹொறணை |
| 32. வர்ணகோன், டபிள்யு. | அரசினர் ஆசுப்பத்திரி, டெரணியகல |
| 33. ரத்ணாயக்க, டி. டபிள்யு. | கொழும்பு தெற்கு பெரியாசுப்பத்திரி, களுபோவில |
| 34. ஆரியபால, பி. ஜீ. எம். | பெரியாசுப்பத்திரி, கொழும்பு |
| 35. அபயகோன், டபிள்யு. டி. | சௌக்கிய சேவை அத்தியட்சகர் காரியாலயம், பதுளை |
| 36. டீ அல்விஸ், டபிள்யு. டீ. | பெரியாசுப்பத்திரி, இரத்தினபுரி |
| 37. குணசேகர, பி. எல். சி. | சௌக்கிய சேவை அத்தியட்சகர் காரியாலயம், கொழும்பு |
| 38. ஜயவர்த்தன, கே. சி. | பெரியாசுப்பத்திரி, கொழும்பு |
| 39. நந்தசேன, எம். டி. | கண் ஆசுப்பத்திரி, கொழும்பு |
| 40. பிரேமசிறி, ஜே. ஏ. | கயரோக தடுப்பு இயக்க அத்தியட்சகர் காரியாலயம், கொழும்பு 12 |

ஜீ. அமரசேன,
பிரதி அதிபதி (நிர்வாகம்),
சௌக்கிய சேவை அதிபதிக்காக.

சௌக்கிய சேவை அதிபதி காரியாலயம்,
கொழும்பு,
1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 23 ந் வ.

9–152—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,922.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

**கொச்சிக்கடை திலக்கரி நிலைய 2 ஆம் இலக்கத் தேனீர்க்கடை**

மேற்கூறிய தேனீர்க் கடையைக் குத்தகையில் கொடுப்பதற்கெனப் பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை 1970.9.18 ஆந் திகதி பிற்பகல் 2.30 மணிவரை கப்பற்றுறை ஆணையாளர் ஏற்றுக் கொள்வார். இக் குத்தகையின் காலம் கப்பற்றுறை ஆணையாளர் நிட்சயிக்கும் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்காகும்.

2. அவருடைய அலுவலகத்திலிருந்து கிடைக்கப்பெறும் படிவங்களில், இணைப் பிரதிகளுடன் கேள்விப் பத்திரங்களைத் தயாரித்தல் வேண்டும். கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவில் ரூபா 25 கட்டுப் பணமாகச் செலுத்தப்பட்ட பின்னர்தான் இப்படிவங்கள் வழங்கப்படும்.

3. 1970.9.16 ஆந் திகதி பிற்பகல் 2.30 மணிவரை எல்லா வேலை நாட்களிலும் கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும்.

4. குத்தகை சம்பந்தமான நிபந்தனைகள் கேள்விப் பத்திரப் படிவங்களுடன் கொடுக்கப்படும்.

9-138—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,922

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

**பொரலஸ்கமுவை, வெரகெரையிலுள்ள விற்றுத்தீர்க்கும் வளவில் பாவிக்கப்பட்ட டயர்களின் விற்பனை**

கொழும்பு—5, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், 25.9.1970 ஆந் திகதி மு. ப. 10. 00 மணிவரை பொரலஸ்கமுவை, வெரகெரையிலுள்ள விற்றுத்தீர்க்கும் வளவிலிருந்து கீழ் குறிப்பிட்ட தொகையான பாவிக்கப்பட்டதும் கலப்பு அளவுகளைக் கொண்டதுமான டயர்களை கொள்வனவுசெய்து எடுத்துச் செல்வதற்கான பொறியிட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக் கொள்ளுவார்.

(அ) புதுப்பிக்கப்பட்ட டயர்கள் — 3700

(ஆ) கழிக்கப்பட்ட டயர்கள் — 7600

டயர்கள், 100 டயர்களைக் கொண்ட கூறுகளாக இலக்கமிடப்படும்.

கேள்வி முடிவடைவதற்குக் குறித்த தேதிக்கு முந்திய தேதி நண்பகல் 12.00 மணிவரை இவ் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடியதான பத்திரங்களில் பொறியிட்ட கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் அனுப்பப்பட வேண்டும். கொழும்பு—5, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இ. போ. ச. பிரதம கணக்காளர் உத்தியோகத்தரிடம் கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக கூறு ஒன்றுக்கு ரூபா 50/- வீதம், ஆகக் கூடுதலாக ரூபா 2700/- வரை காசாகக் கட்டி இதன் பற்றுச்சீட்டுக்களை கேள்விப்பத்திரங்கள் வழங்குவதற்கு முன் எனது அலுவலகத்தில் காட்ட வேண்டும்.

டயர்களை வழமையான அலுவலக நேரங்களில் பொரலஸ்கமுவை, வெரகெரையிலுள்ள இ. போ. ச. விற்றுத்தீர்க்கும் வளவில் பார்வையிடலாம்.

மேலதிக விபரங்களை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பிரதம விநியோக உத்தியோகத்தர்.

விநியோகப் பகுதி, இ. போ. ச.,
வெரகெரை, பொரலஸ்கமுவை.

9-208—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,922

## 2,520 செவ்விளநீர்த் தென்னங்கன்றுகள் வழங்குவதற்கான கேள்விப்பத்திர அறிவித்தல்

1970 செப்ரெம்பர் 16 ம் திகதி மு. ப. 10 மணிவரை மன்னார்க் கச்சேரி கேள்விப்பத்திரச் சபைத் தலைவரால் கீழ்க் குறிப்பிடப்படும் நடுகைக் கன்றுகள் தளத்திலேயே வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன :—

1. செவ்விளநீர்த் தென்னங்கன்றுகள்.—ஆகக் குறைந்தது இரண்டு இலைகளுடன் (ஓலை) தனித்தனி 500 கொண்ட தொகை.

கேட்கப்படும் விலையில் ஒவ்வொரு கேள்விப்பத்திரகாரரும் தம்மால் வழங்கக்கூடிய ஆகக் கூடிய தொகையைக் குறிப்பிடவேண்டும்.

1970 செப்ரெம்பர் 4 ம் வாரத்தில் செவ்விளநீர்க் கன்றுகளைத் தளத்திலேயே கிடைக்கத்தக்கதாகச் செய்தல் வேண்டும்.

கடித உறையின் இடது மேல் மூலையில் "செவ்விளநீர் தென்னங் கன்றுகள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரம்" என குறிப்பிட்டு பதிவுத் தபாலில், அரசாங்க அதிபர், கச்சேரி, மன்னார் என்ற விலாசத்திற்கு அனுப்ப வேண்டும்.

மன்னார் அரசாங்க அதிபரால் அல்லது அவரின் உத்தரவு பெற்றவரால் கன்றுகளை வழங்கும்படி கேட்டுக்கொண்டால், தெரிவு செய்யப்படும் கேள்விப் பத்திரதாரர் விலாசத்தையும் இடத்தையும் குறித்து எந்த சமயத்தில் அல்லது நாற்றுமேடையிலிருந்து கன்றுகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

தெரிவு செய்யப்படும் கேள்விப்பத்திரகாரர் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும். அதற்கு தேவைப்படும் முத்திரைச் செலவையும் ஏற்கவேண்டும். அத்துடன் கேட்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட தொகையின் 10 சத வீதத்தை வைப்புப் பணமாகக் கட்ட வேண்டும்.

எந்தவொரு அல்லது முழுக் கேள்விப்பத்திரங்களை அல்லது அவற்றின் ஒரு பகுதியையோ ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் மன்னார்க் கச்சேரிக் கேள்விச் சபைத் தலைவருக்கு உண்டு.

மேலதிக விபரங்கள் மன்னார்க் கச்சேரி காணி உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ச. கதிர்காமநாதன்,
மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர்.

மாவட்ட காணி அதிபர்,
கச்சேரி, மன்னார்,
25 ஆகஸ்ட் 1970.

9-181—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,922

தொடர் இல. CO/23/70

## சௌக்கிய சேவைத் திணைக்களம்—கொழும்புத் தொகுதி வைத்தியசாலைகள்

### சமையலறைக் கழிவுப் பொருட்கள் விற்பனை—கொழும்புத் தொகுதி வைத்தியசாலைகள்

1.10.1970 தொடக்கம் 30.9.1971 வரையிலான நிதியாண்டில் கீழ்க் காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வைத்திய நிலையங்களி லிருந்து சமையலறைக் கழிவுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற் கும் அவற்றை அப்புறப்படுத்துவதற்குமான சீல்வைக்கப்பட்ட தனித்தனிக் கேள்விகள் இலங்கைப் பிரசைகளிடமிருந்தும் இலங்கையர் வணிக ஸ்தா பனங்களிடமிருந்தும் றெஜென்ற் வீதியிலுள்ள கொழும்புத் தொகுதி வைத்தியசாலைகளின் அத்தியட்சகரால் 1970 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 27 ஆந் திகதி காலை 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. ஒவ்வொரு வைத்திய நிலையம் (பகுதி) சார்பாகவும் வெவ்வேறு கேள்விகள், மாதாந்த விகிதங்கள் குறிக்கப்பட்டு இரட்டைப் பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விகள் எனக்கு விலாசமிடப்பட்ட தபால் உறையினுள் வைக்கப்பட்டு அவற்றின் இடதுபக்க மேல மூலையில் " சமையலறைக் கழிவுப் பொருள் விற்பனை " என எழுதப்பட்டிருத்தல் வேண்டும். கேள்வி வைக்கப்பட்ட, சீல வைக்கப்பட்ட தபால உறைகள் 1970 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 27 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு எனக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபால் மூலமோ அன்றி எனது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டிக்குள்ளோ போடப்படல் வேண்டும்.

3. எல்லாக் கேள்விகளும் 1970 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 27 ந் திகதி காலை 10.00 மணிக்கு எனது அலுவலகத்திற் திறக்கப்படும்.

4. கேள்விகளை அனுப்பிய எல்லாக் கேள்விக்காரரும் அவை திறக் கப்படுகையில் பிரசன்னமாயிருக்கலாம். பிரசன்னமாயிருப்பவர்களின் தகவலுக்காக கேள்விக்காரர்களின் பெயர்களும் வீதங்களும் வாசித்துக் காட்டப்படும்.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்படும் விகிதத்தில் பிணைப்பணத்தைச் செலுத்திக் குறிப்பிட்ட சேவையைச் சரியாகச் செய்து முடிப்பதற்கு ஒப்பந்தம் ஒன்றிற் கைச்சாத் திடுமாறு வேண்டப்படுவர். சேவை சரியாகச் செய்து முடித்ததன் பின்னர் பிணைப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

6. கழிவுப் பொருள்களுக்கான பணம் ஒவ்வொரு மாதத்தின் முதல் வேலை நாளிலும் நணபகல் 12.00 மணிக்கு முன்பாகவோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தப்படல் வேண்டும்.

7. கொழும்பு பெரியாஸ்பத்திரியின் கழிவுப்பொருள் மூன்று பகுதி யாகப் பிரிக்கப்பட்டுள்ளது :

(i) சமையலறைகளின் கழிவுப் பொருட்கள்.

(ii) பெரியாஸ்பத்திரியிலுள்ள எல்லா வாட்டுக்களிலும் உள்ள கழிவுப் பொருட்களும் எஞ்சிய உணவுகளும்.

(iii) கொழும்பு மருத்துவ தாதிமார் பயிற்சிக் கல்லூரியிலுள்ள சமையலறைக் கழிவுப்பொருட்கள்.

8. தேவைப்படும் மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

அ. நாகேந்திரன்,
அத்தியட்சகர்,
கொழும்புத் தொகுதி வைத்தியசாலைகள்.

கொ. தொ. வை. அத்தியட்சகரின் அலுவலகம்,
பெரியாஸ்பத்திரி,
கொழும்பு,
1970 ம் ஆண்டு ஆகஸ்டு மீ 24 ந உ.

### அட்டவணை

| | வைத்திய நிலையத்தின் பெயர் | கட்டப்பட வேண்டிய பிணைப்பணம் ரூ. | ச. |
|---|---|---|---|
| 1. | காசல் வீதி பெண்கள் வைத்தியசாலை, கொழும்பு .. | 50 | 0 |
| 2. | டி சொயசா பெண்கள் வைத்தியசாலை, கொழும்பு .. | 50 | 0 |
| 3. | றிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை, கொழும்பு .. | 50 | 0 |
| 4. | கண் வைத்தியசாலை, கொழும்பு .. .. | 50 | 0 |
| 5. | தலகொல்லை சௌக்கிய அபிவிருத்தி விடுதி, ருகமை | 50 | 0 |
| 6. | பெரியாஸ்பத்திரி, கொழும்பு | | |
| | (i) சமையலறைக் கழிவுப்பொருட்கள் .. | 100 | 0 |
| | (ii) வாட்டுகளிலுள்ள கழிவுப்பொருட்களும் எஞ்சிய உணவுகளும் .. .. | 100 | 0 |
| | (iii) தாதிகள் பயிற்சிக் கல்லூரியிலுள்ள சமையறைக் கழிவுப்பொருட்கள் .. .. | 50 | 0 |

9–117—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14 922

---

## கல்வித் திணைக்களம்

### கொழும்பு தெற்குப் பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு பால், விஸ் கோத்துக்கள் கொண்டு செல்வதற்குரிய கேள்விப் பத்திரங்கள் கோரல்

கேள்விப்பத்திரங்கள் கீழ்க்காணும் சேவைக்காக அழைக்கப்படு கின்றன.

(1) பெட்டிகளில் அடைக்கப்பட்ட விஸ்கோத்துக்களை மலிபன் விஸ்கோத்துத் தயாரிப்பாளர்கள் ஸ்தாபனத்திலிருந்தும் இலங்கை விஸ்கோத்து கொம்பனி ஸ்தாபனத்திலிருந்தும் கீழ்க்காணும் வட்டாரங்களிலுள்ள பாடசாலைகளுக்குக் கொண்டு செல்லுதல்.

(2) குறிப்பிட்ட வட்டாரங்கள் பின்வருவன :

1. கொழும்பு மத்தி.
2. கொழும்பு வடக்கு.
3. கொழும்பு தெற்கு.
4. தெகிவளை/கல்கிசை.
5. மொறட்டுவ.
6. கோட்டை.
7. கொலன்னாவை.
8. கொட்டாவ.
9. கோமகமை.
10. அவிசாவலை.
11. கெஸ்பேவ.
12. பொறளை.

கொழும்பு 7 கிறீன்பாத் கல்வித் திணைக்களப் பிரதேச வித்தியாதி பதி மேற்கூறிய சேவைகளுக்குரிய கேள்விப்பத்திரங்களை 1970 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 18 ந் திகதி காலை 10.30 மணிவரை ஏற்றுக்கொள்வார்.

கேள்விப்பத்திரங்கள் மாதிரிப்பத்திரத்தில் அமைந்திருக்க வேண் டும். இம் மாதிரிப் பத்திரங்களை, கொழும்பு 7 கிறீன்பாத் கல்வித் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் 1970 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17 ந் திகதி நண்பகல் 12 மணிவரை விநியோகிக்கப்படும். கேள்விப் பொறுப்புப் பணமாக ரூபா 100 கொழும்பு 7 கிறீன்பாத் கல்வித் திணைக்களத்தில் கட்டியதும் இப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள லாம். அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் இத்தகைய பொறுப்புப் பணம் கட்டுவதிலிருந்து நீக்கப்பட்டவையாகும்.

கேள்விப்பத்திரங்களை விழங்க முன்னர் கேள்வியாளராக முன் வரும் ஒவ்வொரு விண்ணப்பக்காரரும் ரூபா 10,000 க்குக் குறை யாத பெறுமதியுள்ள அசைவற்ற ஆதனங்களையுடையவரென்று பகுதிக்காரியாதிகாரியின் அத்தாட்சிப் பத்திரமும் இரண்டு வட் டாரங்களுக்குக் கேள்விப் பத்திரங்கள் கோரவிருப்பின் இரண்டு லொறிகளையாவது தன் சொந்தப் பெயரில் பதிவுசெய்து அவற் றிற்குரிய இவ்வருட லைசென்ஸையும் பெற்றுள்ளார் என்றும் கொழும்பு 7 கிறீன்பாத் கல்வித் திணைக்கள வித்தியாதிபதிக்கு அத் தாட்சிப்படுத்த வேண்டும். இரண்டு லொறிகள் தேவையாயிருந்த போதிலும் பிரதேச வித்தியாதிபதி கேள்விப்பத்திரங்கள் கோரப் பட்ட வட்டாரங்களையும் வட்டாரங்களில் கொண்டுசெல்லும் விதி களை முன்னிட்டு மேலதிக லொறிகளைப் பாவனையில் விடுவதைப் பற்றித் தீர்மானிப்பார். கேள்விப்பத்திரங்கள் பெறுமுன் அங்கீ காரம்பெற்ற கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவு அபிவிருத்தி ஆணை யாளரிடமிருந்தும், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் கிராம அபி விருத்தி அதிபரிடமிருந்தும், தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் தொழில் ஆணையாளரிடமிருந்தும் பெற்றுக்கொண்ட அத்தாட்சிப் பத்திரத்தைக் கொண்டு தாங்கள் இவ்வேலையைச் செவ்வனே செய்து முடிக்கக்கூடியவர்களென்பதைக் குறித்த வித்தியாதி பதிக்கு நிரூபிக்கவேண்டும். மேற்கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாதவர்களுக்குக் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமாட் டாது.

பிரதேச வித்தியாதிபதியிடமிருந்தோ அல்லது "கெயர்" ஸ்தாபனத்திடமிருந்தோ ஓடர்கள் கிடைத்த ஒரு கிழமைக்குள் விஸ்கோத்து விநியோகத்தைச் செய்துமுடித்தல் வேண்டும். கேள்விப் பத்திரம் முழுவதையுமோ அல்லது அதன் ஒரு பகுதியையோ ஏற்றுக்கொள்ள கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு. கேள்வியாளர்கள் இக்கேள்விப் பத்திரங்கள் கவனிக்கப்படும்வரை கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்பட்ட இறுதி நாளிலிருந்து ஆறு கிழமை வரைக்குள் கேள்விப் பத்திரங்கள் வாபஸ் வாங்கப்படலாகாது. கேள்விப் பத்திரம் கோரல்பற்றிய விதிகளையும் மற்றும் விபரங்களையும் கொழும்பு 7 கிறீன்பாத், கல்வித் திணைக்களத்தின் நிருவாக உதவியாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

டீ. ஜீ. சுகததாச,
பிரதேச வித்தியாதிபதி.

கல்வித் திணைக்களம்,
கிறீன் பாத்,
கொழும்பு 7,
1970 ம் ஆண்டு செப்ரெம்பர் 4 ந் திகதி.

9-223—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,922

---

## நிர்ப்பாசனத் திணைக்களம்—மாத்தளை உப பிரிவு

மாத்தளை உபபிரிவிலுள்ள வலக்கும்புற அணைக்கட்டு வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் நத்தாரம்பொத்தை குண்டசாலையில் உள்ள மத்திய மாகாண டெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளரினால் 1960ம் ஆண்டு செத்தம்பர் மாதம் 30 ம் தி. தி புதன்கிழமை காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் ரூபா 28,500ம் அதற்குமேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்க தகுதியுடையவராவர். கேள்விப்பத்திரங்கள் நீர்ப்பாசன பொறியியலாளர் மாத்திரம் கண்டி கசலக்க நுவரெலியாவில் 1970 ம் ஆண்டு செப்தம்பர் 16 ம் தி. தி முதல் செப்தம்பர் 28 ம் தி. திவரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம் கேள்வியாளராக முன்வருபவர்கள் தமது பதிவுப் புத்தகத்துடன் இப்போது திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி அவ்வேலைகளுக்கு பொறுப்பாகவுள்ள அதிகாரிகளிடமிருந்து வேலைகள் நல்ல முறையாக நடைபெறுகின்றனவா என்று அறிவதற்காகிய பத்திரங்களும் சமர்ப்பிக்க வேண்டும். மேற்கூறிய பத்திரங்களை பரிசீலனை செய்தபின் கேள்விப்பத்திரங்கள் பெறுந் தகுதியுள்ளவரா என்று நிர்ணயிக்கப்படும்.

கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூபா 50/- நீர்ப்பாசன பொறியியலாளரிடமோ அல்லது எந்தக் கச்சேரியிலாவது செலுத்தி பற்றுசீட்டை கேள்விப்பத்திரங்கள் கோரும்போது காண்பிக்கவேண்டும்.

மேலதிக விபரங்கள் மாத்தளை உபபிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரிடம் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்

எம். சி. டீ. வி. அப்பொன்சோ,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
மாத்தளை உபபிரிவு.

நீர்ப்பாசனப் அலுவலகம்,
மாத்தளை,
1970 ம் ஆண்டு ஓகஸ்ட் மீ 22 ந் உ.

9-149—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,922

---

## காணி அபிவிருத்திப் பகுதி

1970-71 நிதி வருடத்து முதல் அரையாண்டு காலத்துக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள திட்டங்களுக்கு கட்டிடப் பொருட்கள் கொடுப்பதற்கான கேள்விப் பத்திரங்கள் மாங்குளம் காணி அபிவிருத்தி அதிகாரியினால் கோரப்படுகின்றன.

**வவுனியா மாவட்டம்.**

சுதந்திரபுரம், தருமபுரம், முத்தையன் கட்டுக்குளம், வலது இடது கரைகள்.

**யாழ்ப்பாணம் மாவட்டம்.**

வவுனிக்குளம் பகுதி 4 ம், 10 ம், அக்கராயன்குளம், தென்னியன்குளம், அம்பலப் பெருமாள் குளம், முறுகண்டிக்குளம், கிளிநொச்சி, கரியாலை நாகடுவன், மிருசுவில்.

2. கீழே குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடப் பொருட்கள் மேற்கூறிய திட்டங்களுக்குக் கொடுப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் மாங்குளம் காணி அபிவிருத்தி அதிகாரியினால் 1970 ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 19 ம் தி. தி நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்:—

(1) கிடுகு (இணை) 1,000 ஆக (6′ நீளம் / 10″ அகலம்)
(2) சுட்ட சுண்ணும்பு—புசலாக.
(3) நீற்றுச் சுண்ணும்பு—புசலாக.
(4) சுட்ட செங்கல்—1,000 ஆக (பிரமாணம் 8½″/4½″/2½″)
(5) கல்லு (6″/9″) வெள்ளை—கியூப்பாக
(6) கல்லு (6″/9″) கருங்கல்—கியூப்பாக
(7) சல்லிக்கல்லு ½″ வெள்ளை—கியூப்பாக
(8) சல்லிக்கல்லு ½″ கருங்கல்—கியூப்பாக
(9) சல்லிக்கல்லு ¾″ வெள்ளை—கியூப்பாக
(10) சல்லிக்கல்லு ¾″ கருங்கல்—கியூப்பாக
(11) சல்லிக்கல்லு 1″ வெள்ளை—கியூப்பாக
(12) சல்லிக்கல்லு 1″ கருங்கல்—கியூப்பாக.
(13) சல்லிக்கல்லு 1½″ வெள்ளை—கியூப்பாக.
(14) சல்லிக்கல்லு 1½″ கருங்கல்—கியூப்பாக.
(15) சல்லிக்கல்லு 2″ வெள்ளை—கியூப்பாக.
(16) சல்லிக்கல்லு 2″ கருங்கல்—கியூப்பாக.

கவனிப்பு.—விலைகள் வெவ்வேறாக இவைகள் இரண்டிற்கும் குறிப்பிடல் வேண்டும் :

(அ) தயாரிக்கும் இடத்தில்,

(ஆ) வேலைத் தலத்தில் விநியோகிக்க.

தயாரிக்கும் நிலையத்தில் பெறுவதற்கு விலை குறிப்பிடும் போது தயாரிக்கும் இடம் எவ்விடத்தில் இருக்கின்றதென்பது கேள்விப் பத்திரத்தில் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். அனேகமாக தயாரிக்கும் நிலையம் வேலை நடைபெறும் திட்டங்களுக்கு முடிந்தளவு மிகவும் கிட்டவாக இருக்கும். தயாரிப்பு நிலையம் எவ்விடம் உள்ளது என்பது கேள்விப்பத்திரத்தில் குறிப்பிடப்படாதவிடத்து அக் கேள்விப் பத்திரம் நிராகரிக்கப்படும்.

3. கேள்விப் பத்திரம் பெறுவதற்குமுன் இவ் அலுவலகத்திலோ அல்லது ஒரு கச்சேரியிலோ ரூபா 50/- வைப்புப் பணம் கட்டி அதற்கான பற்றுச் சீட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

4. ஒரு திட்டத்திற்கோ அல்லது பல திட்டங்களுக்கோ கேள்விகள் அனுப்பலாம்.

5 கேள்விப் பத்திரங்கள் 1970 செப்தெம்பர் 9 ம் திகதி முதல் 1970 செப்தெம்பர் 18 ம் திகதிவரை கொடுபடும்.

6 ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விதாரர் கோரும் நாளில் இருந்து இரண்டு வாரகால எல்லையுள் பொருட்களை கொடுத்தல் வேண்டும் கேள்விதாரர் அப்படிக் கொடுக்க மறுத்தால் அல்லது கொடுக்கத் தவறினால் அவர் தவறிய ஒப்பந்தகாரர் பட்டியலில் சேர்க்கப்படுவதுடன் தமது வைப்புப் பணத்தையும் இழக்க நேரிடும்.

7. கேள்விகள் யாவும் "கட்டிடப் பொருட்கள் கொடுப்பதற்கான கேள்வி" என தபால் உறையின் இடது புறமூலையில் குறிப்பிடப்பட்டு, முத்திரிகை இடப்பெற்று காணி அபிவிருத்தி அதிகாரி, மாங்குளம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென இக்காரியாலயத்தில வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் போடப்படல் வேண்டும்.

8. 1970 செப்தெம்பர் 19 ந் திகதி பிற்பகல் 3 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விதாரர் சமூகம்தரலாம்.

9. எதாவது ஒரு கேள்வியை அல்லது எல்லாக் கேள்வியையும் எதுவித கேள்வியுமின்றி நிராகரிக்கும் உரிமையை மாங்குளம் காணி அபிவிருத்தி அதிகாரி தன்னகத்தே கொண்டுள்ளார்.

10. மேலதிக விபரங்கள் வேண்டின் மாங்குளம் காணி அபிவிருத்தி அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வ. பா. அ. தம்பிநாயகம்,
காணி அபிவிருத்தி அதிகாரி,
மாங்குளம்.

காணி அபிவிருத்தி அலுவலகம்,
மாங்குளம்.
1970 ம் ஆண்டு ஓகத்து மீ 19 ந் உ.

9-145—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,922

### கல்வி அமைச்சு

#### நூல்நிலையப் புத்தகங்கள் விநியோகம்—1969/70

நூல்நிலையப் புத்தகங்கள் விநியோகித்தற்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் கேள்விச் சபைத் தலைவரால் 1970 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 16 ஆந் திகதி மு. ப. 10. 00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளர்கள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவார்கள். அவைகள் கல்வி அமைச்சின் காரியாலயத்தில் மேலுள்ள 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று, விதிக்கப்பட்ட நேரம் திறக்கப்படும்.

3. கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சுக் காரியாலயத்தில் (விநியோகக் கிளையிலிருந்து) 1970 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி பி. ப. 1 மணிவரை பெறற்பாலனவான படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

4. சகல கேள்விகளும் இணைப்படியில் தயாரிக்கப்பட வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனுப்பப்படும் காகித உறைகளின் இடதுபக்க மேல்மூலையில் "நூல்நிலையப் புத்தகங்கள் விநியோகம்—1969/70" என அடையாளமிடப்பட வேண்டும்.

5. கேள்விப் பத்திரங்கள் அஞ்சல் மூலம் பதிவு செய்து அனுப்பப்படலாம். உள்ளூர்க் கேள்வியாளர் ஒருவர் தமது கேள்விப் பத்திரத்தை மேற்குறித்த முறையில் கேள்விப் பத்திரத்தை கேள்வியாளர் அல்லது அவருடைய முகவர் (காகித உறையின் மேல், 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அடையாளமும் கேள்வியாளரின் பெயரும் விலாசமும் கொடுபட வேண்டும்) கல்வி அமைச்சின் அலுவலக உதவியாளரிடம் நேரில் கொடுக்கலாம். அதனைப் பெற்றுக் கொண்டு பெற்றமையை ஒப்புக் கொள்வதற்கான அறிவித்தலைக் கொடுத்தற்கு அன்னாருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

6. கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சில் (கொடுப்பனவு கிளையில்) அல்லது கொழும்புக்கு வெளியேயுள்ள யாதேனும் கச்சேரியில் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 100/- கட்டி, அப்பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்தே கேள்விப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்படலாம்.

7. விதிக்கப்படும் பிரகாரம் மாதிரிப் பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

8. கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் நிரந்தரச் செயலாளருக்கு (விநியோகக் கிளைக்கு) விண்ணப்பித்து மேலதிக விபரங்களையும் நிபந்தனைகளையும் பெறலாம்.

நிரந்தரச் செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2, ஆகஸ்ட் 28, 1970.

9-224—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,922

---

## பொருட்கள் விற்பனையும் பிறவும்

### பொலிஸ் திணைக்களம்

#### பிரசித்த ஏலவிற்பனவு

இதன் கீழ் குறித்த பாவித்த பொருட்கள் 7 ம் திகதி புரட்டாசி மாதம் 1970 ஆண்டு காலை 9 மணி தொடங்கி கம்பஹா பொலிஸ் ஸ்தானத்தில் ஏலவிற்பனவு செய்யப்படும். இப்பொருட்களை இந்த நிலையத்தில கந்தோர் நேரத்தில் பார்வையிடலாம். இப்பொருட்களை வேண்டியவர்கள் உடன் காசு கொடுத்து பொருட்களை அப்புறப்படுத்த வேண்டும் :—

ஏல விற்பனவாகும் பொருட்களின் விபரம்

| | | |
|---|---|---|
| 1. | காக்கி கோட்டுகள் .. .. | 48 |
| 2. | காக்கி கொலர் கோட்கள் .. | 3 |
| 3. | காக்கி கட்டை கால்சட்டை .. | 60 |
| 4. | காக்கி நீட்டு கால்சட்டை .. .. | 1 |
| 5. | மழைக்கோட்டுகள் .. .. | 13 |
| 6. | தொப்பிகள் .. .. | 141 |
| 7. | கல்லு தொப்பி (Crash) .. .. | 2 |
| 8. | இனஸ்பெக்ரர் தொப்பி .. .. | 1 |
| 9. | கட்டை சப்பாத்துகள் .. .. | 245 |
| 10. | பெரிய சப்பாத்துகள் (பூட்ஸ்) .. | 40 |
| 11. | கனவஸ் சப்பாத்துகள் .. .. | 2 |
| 12. | தோல பட்டிகள .. .. | 16 |
| 13. | காக்கி பட்டிகள் .. .. | 1 |

ஏல விற்பனவாகும் பொருட்களின் விபரம்

| | | |
|---|---|---|
| 14. | கால் மேஸ் .. .. | 24 |
| 15. | சப்பாத்து பட்டீஸ் சோடி .. | 31 |
| 16. | மழைக் கோட் பட்டிகள் .. .. | 4 |
| 17. | பிறஸ்கள் .. .. | 13 |
| 18. | குண்டு வைக்கும் தோல்பை .. | 2 |
| 19. | கோல்ஸ்ரேன்ஸ் .. .. | 2 |
| 20. | போச்சர்ஸ் .. .. | 2 |
| 21. | கிற் றக்ஸ் (போர்வை) .. .. | 23 |
| 22. | மரப் பெட்டிகள் (கிற்பொஸ்க்) .. | 7 |
| 23. | தும்பு மெத்தைகள் .. .. | 55 |
| 24. | அளவு நாடா .. .. | 3 |
| 25. | வெற்று கலன் தகரம் .. .. | 19 |
| 26. | வெற்று 4 கலன் தகரம் .. | 79 |
| 27. | பூட்டுகள் .. .. | 12 |
| 28. | சயிக்கிள் (துவிச்சக்கிரம்) .. .. | 9 |
| 29. | இரும்புக் கட்டில்கள் .. .. | 28 |

உதவி பொலிஸ் அதிபர்,
கம்பஹா.

9–135—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,922

---

### காட்டுத் திணைக்களம்—ஏலவிற்பனை

மட்டக்களப்பு புல்லுமலை வட்டாரத்தில் பறிமுதல் செய்யப்பட்ட இரு இனங்களைக் கொண்ட மரங்கள் மட்டக்களப்பு மாவட்ட வன பரிபாலன அதிகாரியால் 11.9.70 காலை 10 மணிக்கு புல்லுமலை பகுதி வட்டார அதிகாரியின் காரியாலயத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

கேட்க விரும்புவோர் ஏல விற்பனைக்கு முன்பதாகவே மரங்களைப் பார்வை இடும்படி கோரப்படுகின்றனர்.

ஏல விற்பனை பற்றிய முழு விபரங்களும் கீழ் கையொப்பமிட்டவரிடமோ அல்லது மேற்கூறிய புல்லுமலை பகுதி வட்டார வன அதிகாரி காரியாலயத்திலோ பெற்றுக் கொள்ளலாம்.

ச. முத்தையா,
மாவட்ட வன பரிபாலன அதிகாரி,
மட்டக்களப்பு.

மாவட்ட வன பரிபாலன காரியாலயம்,
மட்டக்களப்பு. 11.8.70.

9-14—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14, 922

---

### பொலிஸ் இலாகா

#### பொருட்கள் ஏலவிற்பனை

1970 ம் வருடம் புரட்டாதி மாதம் 14 ம் திகதி காலை 9.00 மணிக்கு மிரிகானை பொலிஸ் வளவில் இருக்கும் நுகேகொடப் பகுதி பிரதான பொருட் பொதி அறை அருகே நடைபெறவிருக்கும் பகிரங்க ஏல விற்பனையில் பழம் பொருட்கள் விற்கப்படவிருக்கின்றன. பொருட்கள் அனைத்தும் விற்பனைக்கு முதல் நாளில் மேற்கூறப்பட்ட இடத்தில் மேற்பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும். ஏலத்தில் பொருட்கள் வாங்குபவர் உடனடியாகப் பணம் கட்டி பொருட்களைக் கொண்டு செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பொலிஸ் அதிகாரி,
மேல் மத்திய மாகாணம்.

பொலிஸ் காரியாலயம்,
நுகேகொடை,
1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 26 ந் உ.

9-147—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,922

## கல்வித் திணைக்களம்

### யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளுக்கு பால், விஸ்கோத்து கொண்டு செல்வதற்கான கேள்விப்பத்திரம் கோரல்

யாழ்ப்பாணக் கல்வித் திணைக்கள கேள்விச் சபைத் தலைவர், 1970 ம் ஆண்டு ஐப்பசி மாதம் தொடக்கம் 1971 ம் ஆண்டு புரட்டாதி 30 ம் திகதி முடியவுள்ள காலத்திற்கு கீழ்க்காணும் சேவைகளுக்கு சீல் இடப்பட்ட கேள்விப் பத்திரங்களை 1970 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 25 ம் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக் கொள்ளுவார். கேள்விப்பத்திரங்கள் இணைப் பிரதிகளில் இருத்தல் வேண்டும். ஒவ்வொன்றும் 19×11×9 அங்குல அளவினதான கிட்டத்தட்ட 20 ருத்தல் பால், விசுக்கோத்துக்களை கொண்ட உறுதியான காட்போட் அட்டைப் பெட்டிகளை விநியோக நிலையங்களில் இருந்து பாடசாலைகளுக்குக் கொண்டு செல்லுதல்.

பின்வரும் சேவைகளுககுத் தனித்தனி கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :—

1. நாவற்குழி விநியோக நிலையத்திலிருந்து எடுத்துச்செல்ல வேண்டிய பின்வரும் கல்வி வட்டாரப் பாடசாலைகள் :—

(அ) கோப்பாய்

(ஆ) கிளிநொச்சி

(இ) சாவகச்சேரி

2. காங்கேசன்துறை விநியோக நிலையத்திலிருந்து எடுத்துச் செல்லவேண்டிய பின்வரும் கல்வி வட்டாரப் பாடசாலைகள் :—

(அ) காங்கேசன்துறை

(ஆ) பருத்தித்துறை

(இ) உடுப்பிட்டி

(ஈ) உடுவில்

3. யாழ்ப்பாண விநியோக நிலையத்திலிருந்து எடுத்துச்செல்ல வேண்டிய பின்வரும் கல்வி வட்டாரப் பாடசாலைகள் :—

(அ) ஊர்காவற்றுறை

(ஆ) யாழ்ப்பாணம்

(இ) நல்லூர்

(ஈ) வட்டுக்கோட்டை

4. வவுனியா விநியோக நிலையத்திலிருந்து எடுத்துச் செல்ல வேண்டிய பின்வரும் கல்வி வட்டாரப் பாடசாலைகள் :—

(அ) வவுனியா

(ஆ) முல்லைத்தீவு

5. மன்னார் விநியோக நிலையத்திலிருந்து எடுத்துச்செல்ல வேண்டிய பின்வரும் கல்வி வட்டாரப் பாடசாலைகள் :

(அ) மன்னார், முருங்கன்.

கேள்விப்பத்திரம் அதற்கென உரியதும் வடமாநில வித்தியாதிபதி அவர்களிடமிருந்து பெறக்கூடியதுமான படிவத்திலேயே கோரல் வேண்டும். யாழ்ப்பாணக் கல்வித் திணைக்கள கஸ்தூரியார் வீதியிலுள்ள நிதிக் கிளையிலோ அல்லது கச்சேரியிலோ ரூபா 100 கட்டுப்பணமாகக் கட்டியதற்கு அத்தாட்சியான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து கேள்விப் பத்திரங்களை 1970 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 20 ம் திகதி மாலை 4.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திர கட்டுப்பண விதிவிலக்கு அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்குண்டு.

3. கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் நேரமும், திகதியும் ஒப்பந்தகாரருக்கு பின் அறிவிக்கப்படும். கேள்விப் பத்திரம் திறக்கப்படும் நேரத்தில் பிரசன்னமாயிருக்க ஒப்பந்தகாரர்கள் அனுமதிக்கப்படுவார்.

4. வடமாநில வித்தியாதிபதி திருப்தி கொள்ளும் வகையில் குறைந்தது ரூபா 15,000 பெறுமதியான அசைவற்ற ஆதனத்தில் உரிமையாளர் என்று அந்த இட பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரிடமிருந்து சமீபத்தில் பெறப்பட்ட ஒரு கடிதமும், இரண்டு கல்வி வட்டாரங்களுக்குக் கோரின் தனது பெயரிற் பதியப்பட்டுள்ள மேல் மூடப்பட்ட ஒரு லொறியும் இரண்டிற்கு மேற்பட்ட கல்வி வட்டாரங்களுக்குமேற்பட விண்ணப்பிக்குமிடத்து ஆகக்குறைந்தது இரண்டு லொறிகளும் தமது சொந்தத்தில் உண்டென்றும் அத்தாட்சிப்படுத்தல் வேண்டும். லொறிகள் மூலம் கொண்டுசெல்லுதல் சாத்தியமற்றதென வடமாநில வித்தியாதிபதி அவர்கள் கருதும் பாடசாலைகளுக்கு அவர் தமது தற்றுணிபின்படி டிறக்றர்களை உபயோகிக்க அனுமதிக்கலாம். ஆனால், அப்படியான டிறக்றர்கள் டிறக்றர் பெட்டிகளை உடையதாகவும் விசுக்கோத்துப் பெட்டிகளுக்கு மழையினாலும் வேறு வழிகளினாலும் ஏற்படக்கூடிய சேதத்தினதும் உறுதியான பாதுகாப்பு அளிக்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். டிறக்றர் வாகனங்களை உபயோகிக்க உத்தேசிக்கப்படுமிடத்து அவை உபயோகிக்கக்கூடியன என்பதை வடமாநில வித்தியாதிபதி அவர்களுக்கு அத்தாட்சிப்படுத்தல் வேண்டும். அத்துடன் விசுக்கோத்துக்களை டிறக்றர்களில் கொண்டு செல்லும்பொழுது ஏற்படக்கூடிய எந்தச் சேதத்திற்கும் அரசாங்கம் பொறுப்புடையதாகாது. ஏற்படும் சேதங்களுக்கு ஒப்பந்தகாரரே பொறுப்பாளியாவதோடு அன்னாரே அதனால் ஏற்படும் நட்டத்தை ஈடுசெய்தல் வேண்டும். ஒன்றிற்கு மேற்பட்ட மாநிலங்களில் இதேபோன்ற சேவையில் ஈடுபடும் ஒப்பந்தகாரர்கள் இம்மாநில சேவைக்கு வேண்டும் வாகனங்களை தனித்துடையவராய் இருத்தல் வேண்டும். வேண்டப்படுமிடத்து கூடுதலான வாகனங்களை உபயோகிப்பதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்விதாரர் ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

5. விநியோக நிலையத்திலிருந்து பாடசாலைகளுக்குக் கொண்டு செல்வதற்கு மாத்திரம் கேள்விகள் கோரல் வேண்டும். விநியோக நிலைய கூலியாட்களினால் விசுக்கோத்துப் பெட்டிகளை வாகனங்களுக்கு ஏற்றப்படும்.

6. கேள்விப்பத்திரங்களை முற்றாகவோ அல்லது அதன் ஒரு பகுதியையோ நிராகரிக்கும் அதிகாரத்தினை கேள்விச் சபைத் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார். கேள்விப் பத்திரதாரர்கள் தமது கேள்விகளை அவை முடிவடைந்த திகதியிலிருந்து 6 கிழமைகளுக்கு செல்லுபடியாக வைத்திருத்தல் வேண்டும்.

7. எல்லாப் பாடசாலைகளுக்கும் ஒரு கிழமைக்குள் விநியோகம் செய்து முடிக்க வேண்டுமென்பதை கேள்விதாரர்கள் கவனித்தல் வேண்டும்.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுடைய சேவையை முன் அறிவித்தலுடன் எந்நேரமும் நிற்பாட்டும் உரிமை வடமாநிலக் கல்வியதிபதிக்குண்டு.

9. இது சம்பந்தமாக மேற்கொண்டு விபரங்களுக்கும், தகவல்களுக்கும் வடமாநில வித்தியாதிபதி யாழ்ப்பாணம் அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

வெ. சங்கரலிங்கம்,
வித்தியாதிபதி, (வடமாநிலம்).

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம், 26.8.1970.

9-177—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,922

---

## நானாவித அறிவித்தல்கள்

### சுங்க அறிவித்தல்

#### குறைவிறக்க குறைப்புறந்தருதற் சான்றிதழ்கள் வழங்கல்

1970 ம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குப் பின் இந்நாட்டுக்கு வருகைதரும் கப்பல்களுக்கான மேற்கூறிய சான்றிதழ்கள் சுங்கத் திணைக்களத்தினால் வழங்கப்படமாட்டாதென்பதை சகல இறக்குமதியாளர்களுக்கும், காப்புறுதித் தாபனங்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

குறைவிறக்கம், குறைப்புறந்தருதல் பற்றிய தகவல்களைத் துறைமுக (சரக்கு) க் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக முகாமையாளருக்கு விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதை அறியத் தருகிறோம்.

வி. பி. வித்தாச்சி,
பிரதம சுங்க சேகரிப்பாளர்.

எமது நிர். எடி/1/70
சுங்கத் திணைக்களம்,
கொழும்பு 1.
28.8.70.

9-228—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,922

### அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்

1.12.1968 தொடக்கி அமுலுக்கு வந்தது

## " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்) "

### வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் மு.ப. 9 மணி முதல் பி.ப. 1 மணி வரையும், மற்றும் நாட்களில் மு.ப. 9 மணி முதல் பி.ப. 4.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் நண்பகல் 12 மணிக்கும், மற்றும் நாட்களில் பி.ப. 3.30 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகல் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக வரைப் அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறொக்ரருல் " கையொப்பமிடப் பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு : —

| | ரூ. ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. | 20 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. .. | 20 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. | 220 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப் பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 1.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 0 .. | 60 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. .. | 36 0 .. | 42 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 50 .. | 51 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும் ,வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

### தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை ரூ. ச. | | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத் திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 50 | .. | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத் திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. | 1 0 | .. | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத் திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 80 | .. | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத் திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 60 | .. | 15 |

இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கபபட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிககவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர். தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிககபபடவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**அட்டவணை— 1970**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஓகத்து | .. | 7. 8.70 | வெள்ளி | .. | 30. 7.70 | வியாழன் | .. | பி.ப. | 3.30 |
| | | 14. 8.70 | வெள்ளி | .. | 7. 8.70 | வெள்ளி | .. | பி.ப. | 3.30 |
| | | 21. 8.70 | வெள்ளி | .. | 14. 8.70 | வெள்ளி | .. | பி.ப. | 3.30 |
| | | 28. 8.70 | வெள்ளி | .. | 21. 8.70 | வெள்ளி | .. | பி.ப. | 3.30 |
| செத்தெம்பர் | .. | 4. 9.70 | வெள்ளி | .. | 28. 8.70 | வெள்ளி | .. | பி.ப. | 3.30 |
| | | 11 9.70 | வெள்ளி | .. | 4. 9.70 | வெள்ளி | .. | பி.ப. | 3.30 |
| | | 18. 9.70 | வெள்ளி | .. | 11. 9.70 | வெள்ளி | .. | பி.ப. | 3.30 |
| | | 25. 9.70 | வெள்ளி | .. | 18. 9.70 | வெள்ளி | .. | பி.ப. | 3.30 |
| ஒற்றோபர் | .. | 2.10.70 | வெள்ளி | .. | 25. 9.70 | வெள்ளி | .. | பி.ப. | 3.30 |
| | | 9.10.70 | வெள்ளி | .. | 2.10.70 | வெள்ளி | .. | பி.ப. | 3.30 |
| | | 16.10.70 | வெள்ளி | .. | 9.10.70 | வெள்ளி | .. | பி.ப. | 3.30 |
| | | 23.10.70 | வெள்ளி | .. | 16.10.70 | வெள்ளி | .. | பி.ப. | 3.30 |
| | | 30.10.70 | வெள்ளி | .. | 23.10.70 | வெள்ளி | .. | பி.ப | 3.30 |
| நவெம்பர் | .. | 5.11.70 | வியாழன் | .. | 30.10.70 | வெள்ளி | .. | பி.ப. | 3.30 |
| | | 12.11.70 | வியாழன் | .. | 5.11.70 | வியாழன் | .. | ந.ப. | 12.00 |
| | | 20.11.70 | வெள்ளி | .. | 12.11.70 | வியாழன் | .. | ந.ப. | 12.00 |
| | | 27.11.70 | வெள்ளி | .. | 20.11.70 | வெள்ளி | .. | ந.ப. | 12.00 |
| திசெம்பர் | .. | 4.12.70 | வெள்ளி | .. | 27.11.70 | வெள்ளி | .. | ந.ப. | 12.00 |
| | | 11.12.70 | வெள்ளி | .. | 4.12.70 | வெள்ளி | .. | ந.ப. | 12.00 |
| | | 18.12.70 | வெள்ளி | .. | 10.12.70 | வியாழன் | .. | பி.ப. | 3.30 |
| | | 24.12.70 | வியாழன் | .. | 17.12.70 | வியாழன் | .. | பி.ப. | 3.30 |
| | | 31.12.70 | வியாழன் | .. | 24.12.70 | வியாழன் | .. | பி.ப. | 3.30 |

அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு மார்ச்சு மீ 5 ஆந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.